அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 27 / 2018
தேதி : 20.02.2018

## அனைத்து கட்சி கூட்டம் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு அமைய வேண்டும்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ரா.சரத்குமார் அறிக்கை.

கடந்த சில தினங்களுக்கு முன் காவிரி நதிநீர் பங்கீடு குறித்து உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தமிழக மக்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக அமைந்தது "காவிரி நீரை எந்த மாநிலமும் உரிமை கொண்டாட முடியாது அது தேசிய சொத்து" என்ற தீர்ப்பு அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்தாலும், காவிரி நடுவர் மன்றம் வழங்கிய இறுதி தீர்ப்பின்படி தமிழகத்திற்கு கர்நாடக அரசு வழங்க வேண்டிய 192 டி.எம்.சி. தண்ணீரின் அளவை, 177.25 அடியாக குறைத்திருப்பது, ஏற்றுக்கொள்ளமுடியாததாகவும், ஏமாற்றம் அளிப்பதாகவும் அமைந்துவிட்டது.

தமிழகத்தின் உரிமையை மீட்பதற்கான சட்டப் போராட்டத்தில், தமிழகத்திற்கான தோல்வியாக, தமிழக அரசின் தோல்வியாகவே இந்த தீர்ப்பு கருதப்படும். அரசிதழில் வெளியிடப்பட்ட காவிரி நடுவர்மன்ற தீர்ப்புக்கு எதிரான தீர்ப்பை, உச்சநீதிமன்றம் வழங்கியிருப்பதிலிருந்தே இத்தோல்வியை உணரமுடிகிறது. மத்திய அரசும், காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதை தள்ளிப்போட்டுக்கொண்டே வந்து, தன் பங்குக்கும் தமிழகத்தை வஞ்சித்துள்ளது என்றே கூறலாம். தமிழகம் சார்பில் சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்தும், மத்திய அரசுக்கு அழுத்தம் தர முடியாமல் போய்விட்டது துரதிஷ்டமே.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா போன்ற ஆளுமையுடன் கூடிய தலைமை இல்லாமற் போனதையும் உணரமுடிகிறது. அவர் இருந்திருந்தால், இத்தகைய சூழல் ஏற்பட்டிருக்குமா என்பதும் ஐயமே.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624





காவிரி விவகாரத்தை பொறுத்தவரை கர்நாடக மாநிலத்தில் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் ஒருமித்த கருத்தும், ஒற்றுமை உணர்வும் இருப்பதை நன்றாக உணரமுடியும். ஆட்சி பொறுப்பில் காங்கிரஸ் கட்சி இருந்தாலும், பாஜக இருந்தாலும் தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்ற நிலைப்பாட்டில் மாற்றம் இருந்ததே கிடையாது. தமிழகத்தில் கருத்தில் ஒருமைப்பாடு இருந்தாலும், அனைத்து கட்சிகளும் ஒற்றுமையாக, ஒருங்கிணைத்து போராட முன்வருவதில்லை என்ற குற்ற சாட்டையும் மறுக்க முடியாது.

இந்நிலையில் வரும் 22-ஆம் தேதி தமிழக முதலமைச்சர் அனைத்துக்கட்சி கூட்டம் கூட்டியிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது. உச்சநீதிமன்ற தீர்ப்பு வெளியானதும், திமுக அனைத்து கட்சி கூட்டம் கூட்டுவோம் என்று அறிவித்து அதை தொடர்ந்து முதலமைச்சர் அறிவித்ததும் அதை ரத்து செய்துவிட்டு முதலமைச்சர் நடக்கவிருக்கும் கூட்டத்தில் கலந்துக்கொள்வதாக அறிவித்திருப்பது ஆரோக்கியமான, நாகரீகமான அரசியல் பண்பாக கருதலாம்.

இப்படிப்பட்ட அரசியல் சாதகமான சூழ்நிலையில், வரும் 22-ஆம் தேதி அனைத்து கட்சிகளும் கட்சி வேறுபாடுகளை களைந்து தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு தமிழகத்தின் உரிமையை மீட்பதற்கான சட்டம் மற்றும் தார்மீக போராட்டத்திற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி அதில் வெற்றியும் பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
தலைவர் / பொதுச் செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com